## வரையறுக்கப்பட்ட சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விசஸ் (தனியார்) கம்பனி – 2018

வரையறுக்கப்பட்ட சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விசஸ் (தனியார்) கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இவ்வறிக்கை வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளவில்லை. சபையால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வுசெய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரையறுக்கப்பட்ட சென்ட்ரல் இன்ஜினியரிங் சேர்விசஸ் (தனியார்) கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்ட ரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் பிரகாரம் நான் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன்.

அ. அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

ஆ. எனது அபிப்பிராயமாவது:

- கணக்காய்வுக்குத் தேவையான எல்லாத் தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் என்பதுடன் இது வரையான எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுகின்றவாறு கம்பனியினால் முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தன.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன.

### 2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்குக் கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 பிராந்திய அலுவலகங்களிற்குரிய ரூபா 31.35 மில்லியன் மற்றும் ரூபா 3,879.05 மில்லியன் கடன்பட்டோர் மீதிகள் முறையே மூன்று ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாகவும் ஒன்று முதல் மூன்று ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலமாகவும் அறவிடப்படாது காணப்பட்டன.

(ஆ) 12 செயற்திட்டங்களுடன் தொடர்புடைய ரூபா 29,676,316 கூட்டுத்தொகையான பிடி காசு 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அநுராதபுரம் பிராந்திய அலுவலகத்தினால் நான்கு ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்டது.

(இ) தென் பிராந்திய அலுவலகத்திற்குரிய முழுமையாக பூரணப்படுத்தப்பட்ட நிர்மாணச் செயற்திட்டங்களுடன் தொடர்புடைய ரூபா 31,269,667 மொத்தமான தீர்க்கப்படாத வேலைதொடக்க முற்பணங்கள் நான்கு ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாது கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தன.

## 2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|
| (அ) 2004 யூலை 29 ஆந் திகதிய பிஈடீ 25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது ரூபா 1,111.07 மில்லியன் தொகை அழைப்பு வைப்புக்கள், குறுங்கால வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள், நிலையான வைப்புக்கள் போன்ற குறுங்கால முதலீட்டு மார்க்கங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் பொது முயற்சிகளின் நல்லாளுகைக்கான வழிகாட்டல்கள் கையேடு | |
| (i) 4.2.5 ஆம் பந்தி | கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் மற்றும் இருப்புக்களின் வயதுப் பகுப்பாய்வும் மெதுவாக நகர்கின்ற மற்றும் பயன்படுத்த முடியாத இருப்புக்களை இனங்காண்கின்ற அறிக்கைகளும் மாதாந்த ரீதியாக சபையினால் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 5.1.3 ஆம் பந்தி | சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நாளதுவரையாக்கப்பட்ட வருடாந்த பாதீட்டுடன் கூடிய நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் வேண்டப்பட்டவாறு வரிசை அமைச்சிற்கும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் 4.2.1 ஆம் வழிகாட்டல் | கம்பனி மீளாய்வாண்டிற்காக பிரதான கொள்வனவுத் திட்டமொன்றை தயாரித்திருக்க வில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறிய இலாபமான ரூபா 110,224,038 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 158,390,770 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 48,166,732 மில்லியன் முன்னேற்றமொன்று காட்டப்படுகின்றது. தேறிய நிதி வருமானம் ரூபா 56,801,791 ஆல் அதிகரித்திருந்தமையே நிதி விளைவுகளில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனி அதன் ரூபா 12,345 மில்லியன் மொத்தச் சொத்து அடிப்படையினைப் பயன்படுத்தி மீளாய்வாண்டில் ரூபா 158 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை சம்பாதித்திருந்தது. ஆகையால், மொத்தச் சொத்துக்கள் மீதான திரும்பல் 1.28 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டதுடன், அது முன்னைய ஆண்டில் 1.11 சதவீதமாக மாத்திரம் காணப்பட்டமையால், அதனையொத்த தொழிலில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தச் சொத்துக்கள் மீதான திரும்பலுடன் ஒப்பிடுகையில் மிகவும் பின்னடைந்த நிலையினைக் காட்டுகின்றது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த இலாப எல்லையும் தேறிய இலாப எல்லையும் முறையே 5.55 சதவீதம் மற்றும் 1.29 சதவீதமாகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த இலாப எல்லை 1.6 சதவீதத்தினால் குறைவடைந்திருக்க தேறிய இலாப எல்லை 0.02 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டில் தேறிய இலாப எல்லையினை 2.9 சதவீதமாக பேணுவதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும், அது அடையப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் வருமான இனங்காணல் அறிக்கையின் படி, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 75,959.00 மில்லியன் பெறுமதியான 817 நிர்மாண ஒப்பந்தங்கள் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தினால் (சீஈசீபீ) கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், 20 நிர்மாணச் செயற்திட்டங்களிற்காக இரு தரப்பிற்குமிடையே உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. அத்துடன், ரூபா 62.95 மில்லியன் பெறுமதியான 04 நிர்மாணச் செயற்திட்டங்களிற்கு சபை அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன், ரூபா 1,592.36 மில்லியன் பெறுமதியான 09 நிர்மாணச் செயற்திட்டங்களிற்காக சீஈசீபீ இடமிருந்து கையளித்தல் கடிதங்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் எஸ்பெல்ட் உற்பத்தி மற்றும் விற்பனையிலிருந்து பதுளை பிராந்திய அலுவலகத்தினால் ரூபா 7,954,812 நட்டமொன்று ஈட்டப்பட்டிருந்தது.

(இ) அடையப்பட வேண்டிய இலக்குகளை நிச்சயித்து அந்த இலக்குகளை அடைவதற்கு இயலுமான விதத்தில் உத்தியோகத்தர்களிற்கு பொறுப்புக்களை ஒப்படைத்து

கூட்டிணைந்த திட்டத்திற்கு அமைவுறும் விதத்தில் செயல்நடவடிக்கைத் திட்டமொன்றை கம்பனி தயாரித்திருக்கவில்லை.

(ஈ) வழமையாக, பிரதான அல்லது விரிவான கொள்வனவுத் திட்டமொன்றைத் தயாரிக்காது கம்பனியின் பிராந்திய அலுவலகங்கள், பல்வேறு வழங்குனர்களிடமிருந்து வேறுபட்ட விலைகளில் நிர்மாணச் செயற்திட்டங்களிற்காக பொருட்களை கொள்வனவு செய்திருந்தன. கம்பனி பிரதான அல்லது விரிவான கொள்வனவுத் திட்டமொன்றைத் தயாரித்து, அதனது அனைத்து நிர்மாணச் செயற்திட்டங்களிற்காகவும் தேவைப்பட்ட ஒட்டுமொத்த பொருட்களையும் குறித்ததோர் வழங்குநரிடமிருந்து கொள்வனவு செய்திருப்பின், குறிப்பிடத்தக்களவு பொது நிதியினை கம்பனி சேமிப்பதற்கு முடிந்திருக்கும்.

## 4.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

குறித்துரைத்த நிதி ஏற்பாடுகள் எதுவுமின்றி பிரேரிக்கப்பட்ட மாகாண மட்டத்திலான இரத்தினபுரி விளையாட்டுக்கள் தொகுதியினை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தி ரூபா 2,134,400 மொத்தப் பெறுமதியுடைய ஆறு மடி கணனிகளும் 10 கையடக்கத் தொலைபேசிகளும் கொள்வனவு செய்யப்பட்டு விளையாட்டுக்கள் அபிவிருத்தித் திணைக்களத்தின் பொறியியலாளர் ஒருவருக்கு அவரின் கோரிக்கையின் மீது வழங்கப்பட்டிருந்தன. அத்துடன், இந்தப் பொருட்களின் தற்போதைய நிலைமை கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 மனித வள முகாமைத்துவம்

கம்பனியின் அங்கீகரித்த பதவியணியின் படி, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 77 பதவிகளில் மேலதிகங்கள் காணப்பட்டன. இருப்பினும், இது தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திலிருந்து தேவையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானங்கள் செலவினங்களிற்கிடையில் 25 சதவீதம் முதல் 154 சதவீதம் வரையிலான வீச்சில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 5.2 கொள்வனவு மற்றும் ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் நிதி அதிகாரப் பகிர்ந்தளிப்பு மற்றும் கொள்வனவுகளிற்கான 33 ஆவது குறைநிரப்பு ஆகியவற்றின் பிரகாரம், ரூபா 10 மில்லியன் பெறுமதியினை விஞ்சுகின்ற கொள்வனவுகளிற்காக கம்பனி தேசிய போட்டிமிக்க விலைகோரல் முறையினை பின்பற்றுதல் வேண்டும். இருப்பினும், இந்த ஏற்பாடுகளிற்கு முரணாக, கம்பனியானது பின்வரும் பொருட்கள் மற்றும் வேலைகளின் கொள்வனவுகளின் போது தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து கூறுவிலைகளை வரவழைத்திருந்தது.

| பிராந்திய அலுவலகத்தின் பெயர் | கொள்வனவு விபரம் | பெறுமதி |
| --- | --- | --- |
| | | ரூபா |
| கடுபெத்த | குளாய்வழி மருத்துவ வாயு முறைமையினை வழங்கிப் பொருத்துதல் | 20,869,297 |
| ஜாவத்த | அலுமினியம் கதவுகள் மற்றும் யன்னல்களை வழங்கி மெருகூட்டிப் பொருத்துதல் | 16,367,059 |
| | மீளஎழுத்தச் சட்டகங்களை (Reinforcement Bars) வழங்குதல் | 86,000,000 |
| | "H" இரும்பினை வழங்குதல் | 33,708,522 |
| | தகட்டுத் துளையினை (Sheet Piles) வழங்குதல் | 69,391,300 |
| | தகட்டுத் துளையினை வழங்கி, செயற்படுத்தி அகழிவுசெய்தல் | 19,835,000 |
| | தண்ணீர் உட்புகாத வேலைகள் | 17,580,000 |
| | கிடைக்கக்கூடியதாகவுள்ள உருக்கு தகட்டுத் துளையினைப் பயன்படுத்தி துளையிடுதல் | 15,480,000 |
| | தயார்நிலை கொங்ரீட் கலவையினை வழங்குதல் | 12,216,250 |

(ஆ) கொள்வனவு வழிகாட்டல்களின் 6.2.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் தேசிய கடைப்பண்ட முறையின் கீழ் கூறுவிலைகளைச் சமர்ப்பிப்பதற்கு ஆகக்குறைந்தது ஏழு நாட்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், கடுபெத்த பிராந்திய அலுவலகத்தினால் மீளாய்வாண்டில் ரூபா 1,984,793 பெறுமதியான கொள்வனவுகளை மேற்கொள்வதற்குரிய கூறுவிலைகளைச் சமர்ப்பிப்பதற்காக ஒன்று அல்லது இரண்டு நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன.

(இ) கொள்வனவு வழிகாட்டல்களின் 3.5.1 ஆம் வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் எவ்வித தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களுமின்றி ஜாவத்த பிராந்திய அலுவலகத்தினால் பின்வரும் வேலைகள்∴பொருட்களின் கொள்வனவுகளிற்காக கூறுவிலைகளைக் கோருகையில் நேரடி ஒப்பந்த நடைமுறை பின்பற்றப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கொள்வனவு விபரம் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப் பெறுமதி |
|---|---|---|
| ------------------------------------ | ------------------------------ | -------------- |
| | | ரூபா |
| அலுமினியம் பொருட்களை வழங்குதல் | அலுமெக்ஸ் பீஎல்சீ | 6,409,137 |
| சூரியக் குடுவையினைப் பொருத்துதல் | எக்ஸல் என்டர்பிரைசஸ் | 1,890,000 |
| சூரியக் குடுவையினைப் பொருத்துதல் | சாந்த அலுமினியம் வடிவமைப்பாளர் | 817,760 |

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் கம்பனியின் தலைவரது கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள்** | | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| ---------------------------------------------------------- | | ---------------------------------------------------------------- |
| (அ) | பதிவேட்டுப்பொருட் கட்டுப்பாடும் இருப்பு முகாமைத்துவமும் | வேலைத்தளங்களிலுள்ள அனைத்து பதிவேட்டுப் பொருட்களையும் இருப்புக்களையும் பெறுமதியிட்டு ஒவ்வோர் நிதியாண்டின் இறுதியிலும் நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்துவருவதன் மீது கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு | முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களில் பயன்படுத்த முடியுமானவற்றை மீள விலைமதிப்பதற்கும் பயன்படுத்த முடியாதவற்றை கைதவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | ஒப்பந்த நிர்வாகம் | கொள்வனவு வழிகாட்டல்கள் மற்றும் தொடர்புடைய சுற்றுநிருபங்களிலுள்ள ஏற்பாடுகளை பின்பற்றத் தவறியமை. |